Register as a N paper Ceylon
P. M. G. NO. H. A 59/300 of 1939.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ம் திகதி ஆரம்பமானது

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும் மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே

புத். ருரு] யாழ்ப்பாணம்:—சுபானு௵ ஐப்பசிᏜ உஉ (1943 நவம்பர்Ꮬ 8 திங்கட்கிழமை) [இல. ருசு

## 43,000 ரூபா கஞ்சாவும் அபினும்

யாழ்ப்பாணப் புகைரதத்தில் வந்த பெட்டியும் பார்சலும்

ரூ. 23,000 பெறுமதியுள்ள 49 ரூத்தல் கஞ்சாவைக் கள்ளத்தனமாகக் கொண்டுசெல்ல எடுத்துக்கொண்ட முயற்சியொன்று, துறைமுகப்பகுதிஅதிகாரிஒருவர்பொலீஸ் உதவியுடன் கைபாண்ட நடவடிக்கையால் தோல்வியுற்றது. குறித்த சம்பவத்தின் விபரம் வருமாறு:—

துறைமுகப்பகுதி அதிகாரி ஒருவர் புகைரத மார்க்கமாக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வரும்பொழுது ஒரு நிலையத்தில் கார் ஒன்றைக் கண்டார், அக்காரிலிருந்து ஒரு பெட்டி இரண்டாம் வகுப்புப் புகைரத வண்டி ஒன்றுக்குள் வைக்கப்பட்டது. துறைமுகப்பகுதி அதிகாரி ஸ்டேஷனில் உத்தியோக உடையின்றி நின்ற ஒரு பொலிஸ் சப்- இன்ஸ்பெக்டரின் உதவியுடன் பிரயாணிகளிலொருவரைப் பெட்டியுடன் கைதுசெய்தார். பெட்டிக்குள் 46 ரூத்தல் கஞ்சா இருந்தது.

மற்றொரு சம்பவம்

15 அபின் கட்டுகளையும் இரண்டு ரூத்தல் கஞ்சாவையும் கொண்ட புகைரதப் பார்சல் ஒன்றும் துறைமுகப்பகுதி அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டது. குறித்த சாமான்கள் விலை ரூ. 20,000 என மதிப்பிடப்பட்டிருக்கிறது. 'கிழங்குகள்' கொண்டதாக எழுதப்பட்ட பார்சல் ஒன்று வடமாகாணத்திலிருந்து புகைரதமூலம் அனுப்பப்பட்டதாகவும், துறைமுகப்பகுதி அதிகாரி பொலிசாரின் உதவியோடு அதைச் சந்தேகத்தின்பேரில் திறந்து பார்த்தபொழுது அதில் அபினும் கஞ்சாவுமிருந்ததாகவும் தெரியவந்திருக்கிறது.

---

## சமய தீக்ஷை

நிகழும் சுபானு௵ ஐப்பசி Ꮬ உசு உ (12-11-43) வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிச் சைவ வாலிபர் சங்கவாதாவில ஷெடி கல்லூரிக் கீழ் மண்டபத்தில் சீராவிமடம் ஸ்ரீமத். ந. சோமசுந்தரக் குருக்கள் அவர்களால் கல்லூரி மாணவர்களுக்கும் பிறர்க்கும் காலை 8 மணியளவில் ஆரம்பித்துச் சமயதீக்ஷை செய்யப்படுமென அறிகின்றோம்.

---

## அடுத்த ஆஸ்திரேலிய கவர்னர் ஜெனரல்

கிளஸ்டர் கோமகன் நியமிக்கப்படலாம்

மெல்போர்ன் நவ 3—

ஆஸ்திரேலியாவின் அடுத்த கவர்னர் ஜெனரலாகப் பிரிட்டிஷ் ராஜவம்சத்தைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்படலாமென்று உயர்தர பெடரல் அதிகாரிகள் கூறிக்கொள்வதாக மெல்போர்ன் 'சன' பத்திரிகையின் ராஜ்ய நிருபர் கூறுகிறார்.

இது சம்பந்தமாகக் கிளஸ்டர் கோமகனின் பெயர் அடிபடுகிறதென்றும் அவர் அறிவிக்கிறார்.

# யாழ்ப்பாணப்பட்டினசபைத்தேர்தல்

## இன்று நியமனப் பத்திரங்கள் அங்கீகரிக்கப்பட்டன

யாழ்ப்பாணப் பட்டினசபைத் தேர்தல் நிகழும் நவம்பர்Ꮬ 27-ந் திகதி சனிக்கிழமை நடைபெறும்.

இம்முறை தேர்தல் மிக உற்சாகமாக விருக்குமென்றும் ஒவ்வொரு வட்டாரத்திலும் போட்டி மிக உக்கிரமானதாக இருக்குமென்றும் கருதப்படுகிறது.

இன்று மாகாணத் தலைவரால் நியமனப்பத்திரங்கள் அங்கீகரிக்கப்பட்டபோது போட்டியின்றி நால்வர் பட்டினசபை அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டதாகப் பிரகடனஞ் செய்யப்பட்டது. அவ்வாறு போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டோர்:-

1. திரு. C. பொன்னம்பலம் 5-ம் வட்டாரம்
2. திரு. K. V. சின்னத்துரை 6-ம் வட்டாரம்
3. திரு. V. S. S. குமாரசுவாமி 7-ம் வட்டாரம்
4. திரு. S. பதஞ்சலி 8-ம்வட்டாரம்

போட்டியுள்ள வட்டாரங்கள்

மற்றைய எட்டு வட்டாரங்களுக்கும்போட்டி நியமனப் பத்திரங்கள் கிடைத்தன.

கீழ்க்குறித்த வட்டாரங்களுக்குப் போட்டியிடுவோர் பெயர்கள் வருமாறு:. அவர்கள் நிறங்கள் அடைப்புக் குறிக்குள் இருக்கின்றன.

1-ம் வட்டாரம், 1 திரு. J. D. வீரசிங்கம் (பச்சை) 2. திரு. S P. நடராஜா (சிவப்பு) மிஸ்றர். அரியபத்திராஜு (மஞ்சள்)

2-ம் வட்டாரம்: 1. மிஸ்றர். J பற்றிக் (பச்சை) 2. மிஸ்றர். விட்டல் A. மோசஸ் (மஞ்சள்)

3-ம் வட்டாரம் திரு. V. A. துரையப்பா (சிவப்பு) 2. மிஸ்றர். J. செபஸ்தியாம்பிள்ளை (பச்சை) 3. மிஸ்றர். V. சுப்பையா (மஞ்சள்)

4-ம் வட்டாரம் 1. திரு. P. காசிப்பிள்ளை (சிவப்பு) 2, மிஸ்றர். V. M. சரவணமுத்து (பச்சை)

9-ம் வட்டாரம் 1. மிஸ்றர். S. M. N. அபூபக்கர் (மஞ்சள்) 2. மிஸ்றர். S. M. அப்துல்காதர் (சிவப்பு)

10-ம் வட்டாரம்: 1. மிஸ்றர். சாம். ஏ. சபாபதி (சிவப்பு) 2. மிஸ்றர். ஏ. கனகசபை (பச்சை)

11-ம் வட்டாரம்:- 1. மிஸ்றர். C. T. நவரத்தினம் (மஞ்சள்) 2. மிஸ்றர். S. R. தளையசிங்கம் (பச்சை) 3. மிஸ்றர். C. C. சோமசேகரம் (சிவப்பு)

12-ம் வட்டாரம் 1. மிஸ்றர். P. போட்டிமர் (பச்சை) 2. மிஸ்றர். E. T. ஹிச்கொக் (சிவப்பு)

---

## பொலீஸாரின் சூழ்ச்சி பற்றிக் 'கொன்ஸ்டெபிள்'

மாத்தறைக் கோலை வழக்கில் சாட்சியம்

மாத்தறைப் பொலிஸ் கொலைக் கொலைவழக்கு மீண்டும் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டபொழுது கிச்சிலன் என்னும் 'கொன்ஸ்டபிள்' பின்வருமாறு சாக்ஷியங் கூறினார்:-

மார்ச் மாதம் 18-ந் தேதி நான் ஹின்னி அப்புவை அப்புறம் அழைத்துச் செல்லவில்லை. பி. வி. சமதும் பி. எஸ். பிரேமச் சந்திராவுமே அவரை அழைத்துச் சென்றனர். ஹின்னி அப்பு தாக்கப்பட்டபொழுது நான் திரு. சிபெலிடம் சென்று தகவல் தெரிவித்தேன். உடனே திரு. சிபெல் ஸ்தலத்துக்குச் சென்றார். அப்பொழுது ஹின்னி அப்பு இறந்து விட்டார். ஹின்னி அப்பு மாதத்தருகில் அல்லது மாதத்தின்கீழ் விழ்ந்தாரென்று சொல்லும்படி இன்ஸ்பெக்றர் பேர்டினனட்ஸ் எனக்கறிவித்தார்.

நான் அப்படிச் சொல்லமாட்டேனென்று பதிலளித்தேன். நாங்கள் எப்படியாவது என்னைக் காப்பாற்றுவதாக இன்ஸ்பெக்றர் பேர்டினன்ட்ஸ் உறுதி கூறியபோதிலும் நான் மறுத்தேன். இன்ஸ்பெக்றர் சிபெல் கோபாவேசத்துடன் என்னைப் பார்த்தார்.

அவர்கள் விரும்பியதை நான் சொல்லாவிட்டால் அவர்கள் எதிர்காலத்தில் ஏதாவதொரு சமயத்தில் எனக்குத் தொந்தரவையுண்டுபண்ணுவரென்று நான் நினைத்தேன். நான் முப்பொழுது சொன்னது பொய்யாகும்.

மார்ச் மாதம் 23-ந் தேதி நான் விளக்கமறியலில் வைக்கப்பட்டேன். நான் கோட்டுக்கழைத்துச் செல்லப்பட்டபொழுது பொலீஸார் எனக்காக வழக்கறிஞர்களை ஏற்படுத்தியிருந்தனர். இன்ஸ்பெக்றர் பேர்டினன்ட்ஸ் கோட்டிலிருந்தார். நான் எக்காரணமுமின்றி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பதாயும், நீதிபதியிடம் உண்மையைத் தெரிவிக்கப்போவதாயும் இன்ஸ்பெக்றரிடம் கூறினேன். இன்ஸ்பெக்றர் பேர்டினன்ட்ஸ் உதவிப் பொலிஸ் சூப்பிரண்டும் பேசி என்னை விடுதலை செய்வதாக வாக்களித்தார்.

மேல் விசாரணை திங்கட்கிழமை வரை தவணைபோடப்பட்டிருக்கிறது.

---

## அரசியற் பிரச்னையும் டில்லி அபிப்பிராயமும்

புதுடில்லி அக் 31—

புது வைசிராய் வேவல் பிரபு என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுவார் என்பதுபற்றி டில்லியில் பலவித அபிப்பிராயங்கள் தோன்றியவண்ண மிருக்கின்றன. காங்கிரஸையும் முஸ்லிம் லீகையும் ஒதுக்கிவிட்டு, தொழிலாளர்களையும் விவசாயிகளையும் தமக்கு ஆதரவாக்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

## ஜெர்மன் அரண் இரு இடங்களிலும் துளைக்கப்பட்டது

கிரிவாய்ராக்கிற்கு வெளியே கடும்போர்

மொஸ்கோ நவ.4—

அலெக்ஷி கைப்பற்றப்பட்டிருக்கிறதென்று உத்தியோக முறையில் அறிவிக்கப்படுகிறது.

தெலிகிஅரிக்கு தென் மேற்கே ருஷ்யர் ஜெர்மன் அரணை இரண்டு இடங்களிலும் பிளந்து விட்டனரென்று ஜெர்மன் செய்தி ஸ்தாபனத்தின் இராணுவ நிருபர் இன்றிரவு அறிவிக்கிறார்.

கிரிவாய்ராக்கிற்கு வெளியே கடும்போர் நடைபெற்று வருகிறது. அங்கிருக்குச் செல்லும்வழிகளில் ஜெர்மானியர்போட்டுவிட்டுச் சென்றிருக்கும் யுத்த தளவாடங்கள் நிறையக் கிடக்கின்றன. கீழ் நீப்பர் நதிப்பகுதியில் தென் கரையிலுள்ள ஜெர்மன் பாலமுனைகளை ருஷ்யர் அழித்துவருகின்றனர். நீப்பர் நதிக்கரையின் முகத்துவாரப் பிரதேசத்தின் மேற்குப் பகுதியில் உள்ள நிலத்தை அணுக அணுக ருஷ்யர் ஏராளமான ஜெர்மானியரைச்சிறைபிடிக்கின்றனர். ருஷ்யர் அதிவேகமாக முன்னேறி 12 நாட்களில் மெலிடாபோலுக்கு அப்பால் 1500 மைல்வரை சென்றிருக்கின்றனர்.

பெரும் ஜெர்மன் சேதம்

கடந்த நான்கு மாதங்களில் சோவியத்பிரதேசத்தில் 3,50,000 சதுர கில்லோ மீட்டர்களை ருஷ்யப் படைகள் சத்துருவிடமிருந்து விடுதலை செய்திருக்கின்றன.

1200 மைல் நீளமுள்ள போர் முனையில் செஞ்சேனை 180 முதல் 270 மைல்வரை முன்னேறியிருக்கிறது. 162 நகரங்கள் உட்பட 38,000 ஜெர்மன் வீரர்கள் கொல்லப்பட்டனர். 98,000 ஜெர்மன் வீரர்கள் சிறைபிடிக்கப்பட்டனர், இவர்களில் பாதிக்கு அதிகமானவர்கள் காயமடைந்தவர்கள். சுமார் 148 ஜெர்மன் டிவிஷன் முறிபடுகின்றன. இவைகளில் 28 ஜெர்மன் டாங்கிப்படைகளும் பல மோட்டார்ச் சாதனப்படைகளும் உண்டு. இந்த நான்கு மாதங்களில ஜெர்மானியர் மொத்தமாக 2,700,000 வீரர்களை இழந்திருக்கின்றனர்.

---

## ஜப்பானியரின் மிருகத்தனம்

22 ஆஸ்திரேலியர்களைச் சிரச்சேதம் செய்தனராம்

நியூயோர்க் நவ 4—

22 ஆஸ்திரேலியர்களை ஜப்பானியர் பிரெஞ்சு இந்து சீனத்தில் எவ்வித காரணமுமின்றிச் சிரச்சேதம் செய்துவிட்டனரென்று தென்ஆபிரிக்காவிலிருக்கும் போர்ட் எலிஸபெத் துறைமுகத்தில வந்திறங்கும் பிரயாணிகள் கூறுகின்றனரென அஸோஸியேடட் பிரஸ் செய்தியொன்று தெரிவிக்கிறது.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சுபானு௵
ஐப்பசி௴ ௨௨ திங்கட்கிழமை

## மல்லியும் இங்குள்ள மக்களும்

மல்லி கறிக்குரிய வெஞ்சனங்களில் இன்றியமையாத ஒன்றாயிருப்பது மாத்திரமல்லாமல், பல ஔஷதங்களுக்கு அநுபானமாகவும் குடிநீர்களுக்கும் இன்றியமையாததாகவிருக்கின்றது. மல்லியை இப்பொழுது இங்கு எவ்வகையான உபயோகத்திற்கும் போதிய அளவிற் பெற்றுக்கொள்ளுதல் இயலாமலிருக்கின்றது; இந்த இன்றியமையாப் பொருளை இலங்கையில் ஆக்கி விருத்திபண்ணி உபயோகிக்கலாமென்பது உடனுக்குடன் செய்யத்தக்கதன்று; ஆனால், அத்தியாவசியமாய்ச் செய்யவேண்டியதுதான்.

இப்பொழுது கொத்தமல்லிப் பஞ்சங் காரணமாக இங்குள்ளார்படுங் கஷ்டஞ் சொல்லுந் தரத்ததன்று; காரணமென்னையெனின் எங்கள் அதிகாரிகள் கிடைக்கும் அற்ப மல்லியையும் சனங்களுக்கு ஒரே வகையிற் பகிர்ந்து கொடுக்க முடியாமலிருத்தலேயாகும். அதிகாரிகள் தொகையாக வியாபாரஞ் செய்யுங் கடைக்காரருக்குக் கொத்தமல்லியை உதவ, அவர்கள் ஐக்கிய சங்கக் கடைகளுக்குக் குறித்த குறித்தபாகங்களை உதவ ஐக்கியசங்கக்கடைக்காரர் பங்காளிகளுக்கு மாத்திரம் கட்டுப்பாட்டு விலைக்குக் கொடுக்க, பங்காளிகளல்லாராய் அக்கடைகளிற் பண்டம் வாங்குவோர் கொத்தமல்லியைப் பெற்றுக்கொள்ளுதல் கஷ்டமாகவிருக்கின்றது. ஐக்கியசங்கக் கடைகளல்லாதனவாய், ஆனால் கூப்பனுக்கு அரிசி முதலியன கொடுப்பனவாயுள்ள சில்லறை வியாபாரிகளின் கடையில் ஏழைமக்கள் போய்க் கட்டுப்பாட்டுவிலைக்குக் கொத்தமல்லி கேட்டால், மல்லி தம்மிடம் அறவேயில்லையென்று சொல்லிவிடுகிறார்கள். ஏன் இல்லையென்று மீளக்கேட்டால், தொகை வியாபாரிமார் தங்களுக்குக் கொத்தமல்லிதர மறுக்கிறார்கள், ஆகையால் இல்லையென்று சொல்லுகிறார்களென இந்தச் சில்லறை வியாபாரக் கடைக்காரர்கள் தெரிவிக்கிறார்கள். எங்கள் ஊரிலே சங்கக் கடைகளிற் பங்குப்பணம் கட்டுவதற்கு வகையறியாத பரம ஏழைகள் கணக்கிறந்தவர்கள் இருக்கிறார்கள்; நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பதுபேர் மேலே சொல்லப்பட்ட நிலைமையிலுள்ளவர்களெனலாம். இப்படிப்பட்ட ஏழைமக்கள் மல்லியில்லாமற் செய்வதென்ன?

சென்றவாரத் தொடக்கமாக இங்குள்ள சில பெரிய கடைக்காரர் இன்ன தினத்தில் இத்தனைமணி நேரத்திற்குக் கொத்தமல்லி தத்தம் கடையில் விற்கப்படுமென்று விளம்பரஞ்செய்து அப்படி விற்கத் தொடங்கியுமிருக்கிறார்கள்; ஆனால் ஏழைமக்கள் ஆவலோடு குறித்த தினத்தில் குறித்த மணித்தியாலத்திற் குறித்த கடைக்குப்போய், ஆங்கே சன நெருக்கத்தினால், அரோக திடகாத்திரமுள்ளவர்கள் மாத்திரம் மல்லி பெற்றுக்கொண்டு மகிழ்ச்சியோடு மீண்டுவிட, பெண்களாயும் சிறுவர் சிறுமியர்களாயும் பலவீனர்களாயுமுள்ளவர்கள் தள்ளுண்டும் இடியுண்டும் நெருக்குண்டும் ஈற்றில் வெறுங்கையினராக மீளுகின்றார்களாம். இந்தச் சங்கடங்களெல்லாம் முந்திச் செத்தல்மிளகாய் வாங்கும் விஷயத்தில் அநுபவப்பட்டனவல்லவா?

செத்தல்மிளகாய் சீனியென்னுமிவைகள் கூப்பனுடன் சேர்த்துக் கட்டுப்பாடு செய்யப்பட்டபின் இப்பண்டங்கள் அகப்படாமையினாற் கஷ்டப்படுவோரைக் காணோம். மேலதிகமாக அரிசி நெல் மிளகாய் மா என்னுமிவைகளைப் பெற விரும்புவோர் பணத்தை அதிகமாகக்கொடுத்து வேறுமார்க்கமாகப் பெற்றுக்கொள்ள முயன்றால் அதற்கு அதிகாரிகள் என்செய்வது? அதிகாரிகள்மேல் தோஷஞ்சொல்லவும் இடமில்லையாம். ஏழை மக்கள் இன்றியமையாப் பொருள்கள் பொருட்டுக் கஷ்டப்பட எவரும் விடவொண்ணாது. ஆனதால், மிளகாய் சீனியென்னும் பொருள்களுக்குக் கூப்பன் கட்டுப்பாடு செய்தவாறு, மல்லி, இயலுமானால் மிளகு வெந்தயம் முதலிய ஆவசியகமான பொருள்களுக்கும் கூப்பன் கட்டுப்பாடு செய்தால் இங்குள்ள மக்கள் ஒருவாறு வறுமையிற் செம்மையாகக் காலங்கழித்தல் முடியும். இதனைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் நன்கு சிந்தித்து ஆகவேண்டிய ஒழுங்குகளை விரைவிற் செய்வார்களாக.

## சாராயத் தவறணை

நேற்று (7-11-43) இங்குள்ள தவறணைகளிற் சாராயம் பகிரப்படும் திருநாளாகும். இதற்கு முந்தி இப்படிச் சாராயம் பகிரப்படுந் தினமென்றால், இப்பட்டினம் கிராமங்கள் முதலாம் சகல இடங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான சனங்கள் ஆண்கள் பெண்கள் சிறியார் பெரியார் என்ற பேதமின்றி இவ்விரண்டு போத்தல்களையும் கரங்களிற் பிடித்தவர்களாய், எங்கெங்குச் சாராயத்தவறணைகள் உண்டோ அங்கங்கெல்லாம் கூட்டங்கூட்டமாகப் போவதைக் காணலாம். ஆனால், நேற்றைத் தினத்தில் எப்படி நடக்குமென்று அவதானித்தவிடத்தில், இங்குள்ள சாராயத்தவறணைகளிற் சிலசில பொலிசர்கள் காவலாக நிற்கிறார்களேயொழிய, சாராயப்போத்தல் கொண்டுபோவோர் வருவோர் எவரையுங் காணவில்லையென்று நமது நிருபர் தெரிவிக்கின்றார். இது சாராயம் விலையேற்றப்பெற்றமையினால் வந்த பெரும் நன்மையாகும், ஆனால் இந்த அருமையான கட்டுப்பாட்டையொழிப்பதற்காக இப்பொழுது முயற்சிகள் நடைபெறுகின்றனவென அறியலானோம். அது உண்மையானால் அச்செயல் சனத்துரோகமான செயலென்பதை அவர்கள் அறிந்து அடங்குவார்களாக.

இலக்கியப் பகுதி:

# முத்துக்குமார சுவாமி பிள்ளைத் தமிழ்

[ க. கி. ந. ]

I

தமிழ்மொழியிலுள்ள 96 வகைப் பிரபந்தங்களுள் பிள்ளைத் தமிழும் ஒன்றாகும். கடவுளரையேனும் ஆசிரியரையேனும் பேருபகாரிகளையேனும் குழந்தையாக வைத்துக் காப்பு முதலிய பத்துப் பருவங்களமைத்துப் பாராட்டுவது பிள்ளைத்தமிழின் இலக்கணமாகும். அவரை அவர்தம் பிள்ளைமைப் பருவத்தில் செவிலித்தாயர் முதலிய பெண்கள் பேரன்போடு ஆர்வமிகுதியான் மிக்க மகிழ்ச்சி பயக்கும் வார்த்தைகளாற் பாராட்டிச் செப்பியும் அசவியும் சொல்லுங் கிளவியாகப் புலவராற் புனைந்து காட்டப்படுவது இப்பிரபந்தமென்ப. இது பஃறொடை வெண்பாவாலாயினும் ஆசிரிய விருத்தத்தாலாயினும் கலி விருத்தத்தாலாயினும் பாடப்படலாமென்பதும், பிள்ளைப் பருவத்தின் ஒவ்வொரு கூறுபாட்டிலும் மும்மூன்றாகவாவது, ஐவைந்தாகவாவது, எவ்வேழாகவாவது, ஒவ்வொன்பதாகவாவது, பப்பதினொன்றாகவாவது ஒற்றைப்பட்டுவரச் செய்யுள்கள் யாக்கப்படவேண்டுமென்பதும், தனித்தனி ஒவ்வொரு கூறுபாட்டிலும் பதினொரு செய்யுள்களுக்குமேல் இருத்தல் கூடாதென்பதும் பிள்ளைத் தமிழ் இலக்கணங்களாகும். இன்னும், பிள்ளைத்தமிழின் முதற் செய்யுளின் காலடியும் தம்முள் எழுத்துக்களின் தொகையளவில் (ஒற்றுநீத்தெண்ணி) ஒத்திருத்தல் வேண்டுமென்பதும், ஒருபருவத்தில் வரும் பாக்கள் ஓரோசைவண்ணத்தாற் பாடப்படுமாயின் அவற்றின் கடைசியடியினிறுதி ஒரு சொற்றொடராகவே பாடப்படுதல் வேண்டும் என்பதும் பாட்டியல் நூல்கள் கூறும் விதிகளாகும். காப்புச் செய்யுள் ஒன்பதாகவாவது பதினொன்றாகவாவது இருத்தல் வேண்டுமென்பதே விதி. எனினும், அவற்றிற் குறைவாகவும் ஏனைப் பருவச் செய்யுட்களின் தொகையளவாகவுஞ் சில பிள்ளைத் தமிழ்களிற் காணப்படுகின்றன. இப்பிரபந்தம் பஃறொடை வெண்பாவாலாயினும் ஆசிரிய விருத்தத்தாலாயினும் கலி விருத்தத்தாலாயினும் பாடப்படத்தக்கது எனப் பாட்டியல் நூல்கள் கூறுகின்றனவேனும், இக்காலத்து வழங்கும் பிள்ளைத்தமிழ் நூல்களெல்லாம் ஆசிரிய விருத்தத்தாலேயே பாடப்பட்டிருத்தலைக் காணலாம். பஃறொடை வெண்பாவாலும் கலிவிருத்தத்தாலும் இயற்றப்பெற்ற பிள்ளைத் தமிழ் நூல்கள் இறந்துபட்டனபோலும். பன்னிரு பாட்டியல் முதலிய பாட்டியல் நூல்களெல்லாம் பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தவகையையே முதற்கண் எடுத்தோதி அதன் இயல் கூறுகின்றன. இதனால், பிள்ளைத்தமிழின் சிறப்பு நன்கறியத் தக்கது. இன்னும் தொல். புறத்திணையியல் உகூம் சூத்திரமாகிய "குழவி மருங்கினும் கிழவதாகும்" என்னும் சூத்திரத்திற்கு உரை கூறுமிடத்து ஆசிரியர் நச்சினார்க்கினியர் பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தத்தின் இலக்கணங்கள் சிலவற்றைத் தமது உரையில் ஒரு சிறிது விரிக்கின்றார். அதனை ஆண்டுக்காண்க. விரிவஞ்சி ஈண்டு அதனை எடுத்துக் காட்டுகின்றிலம்.

இனி, இப் பிள்ளைத்தமிழ் பிள்ளைப்பாட்டு, பிள்ளைக்கவி என்னும் பெயர்களாலும் வழங்கப்படும். இப்பிள்ளைத்தமிழ் ஆண்பாற் பிள்ளைத் தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும். பெண்பாற் பிள்ளைத் தமிழிலமைந்த பருவங்களுக்கும் ஆண்பாற் பிள்ளைத்தமிழிலமைந்த பருவங்களுக்கும் சில வேறுபாடுகள் உண்டு.

"பிள்ளைப் பாட்டுத் தெள்ளிதிற் கிளப்பின்
திங்க ளிரண்டில் தெய்வங் காக்கென
இன்றமிழ்ப் புலவ ரியம்பிய காப்பும்
ஐந்தாந் திங்களிற் செங்கீரை யாடலும்
ஆறாந் திங்களிற் கூறுதல் கற்றலோ
டேழாந் திங்களின் இன்னமு தூட்டலும்
எட்டாந் திங்களி னியற்று லாட்டலும்
ஒன்பதாந் திங்களி னுயர்சப் பாணியும்
பத்தினோ டொன்றின் முத்தங் கூறலும்
ஆண்டு வரையின் ஈண்டுவரு கென்றலும்
மதியி ரொன்பதின் மதியை யழைத்தலும்
இரண்டா மாண்டிற் சிறுபறை கொட்டலும்
மூன்றா மாண்டிற் சிற்றில் சிதைத்தலும்
நாலா மாண்டிற் சிறுதே ருருட்டலும்
பத்திற் பூணணி பன்னீ ராண்டினிற்
கச்சொடு சரிகை காமுறப் புனைதலென்
றின்னவை பிறவு மாகுமி வற்றுண்
முன்ன ரொழிந்த வொழிந்தவற் றோடும்
பெற்ற வாண்பாற் பிள்ளைப் பாட்டாம்"

எனவரும் பிங்கலந்தைச் சூத்திரத்தால் ஆண்பாற் பிள்ளைப் பருவங்களின் பெயரும் முறையுங் காலமுந் தெள்ளிதி னுணரப்படும்.

(வரும்)

## சாராய விலையை உயர்த்தியது

### சட்டநீதியானதென்கிறார் சட்டக் காரியதரிசி

நவம்பர்மாதம் 1-ந் திகதியிலிருந்து சாராய விலையை அதிகரிக்க முடிவு செய்திருப்பது சட்டவிரோதமானதென்று புதன்கிழமை அரசாங்கசபையில் விவாதிக்கப்பட்டதல்லவா? பாதுகாப்புச் சட்ட விதிகளின்கீழ் தேசாதிபதி மதுபரிபாலனக் கமிஷனருக்கு வழங்கியிருக்கும் அவசர அதிகாரத்தின்படி மதுபரிபாலனக் கமிஷனர் செய்தது சட்ட வரம்புக்குட்பட்டதென்று இப்போது அறியப்படுகிறது.

நேற்று நடைபெற்ற அரசாங்க சபைக்கூட்டத்தில் இதைப்பற்றிச் சட்டக் காரியதரிசியிடமிருந்து கிடைத்த பதிலை உள்நாட்டுமந்திரி சபையில் வாசித்தார்.

# தீபாவலி

(கொழும்பு விவேகானந்தசபை ஆதரவில் தீபாவலித்தினத்தன்று வானொலி நிலையத்தில்
திரு. குல. சபாநாதன் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவு)

(முற்றொடர்)

தீபாவலிக்காலமாகிய புண்ணிய உஷத் காலத்தில் (வைகறை) எண்ணெய் தேய்த்து ஸ்நானஞ் செய்வது கங்கையிற் படிதற்கொப்பாகும் என்று கூறப்படுகின்றது. இதனாலேயே அற்றைத் தினத்தில் ஒருவரையொருவர் சந்திக்கும்பொழுது 'கங்கா ஸ்நானமாச்சோ' என்று கேட்கும் வழக்கம் தமிழ்நாட்டில் ஏற்பட்டது.

இத்தினம் இலக்குமியை வழிபடும் தினமாகவும், வடஇந்தியாவில் கொண்டாடப்படுகின்றது. வியாபாரிகள் புதுக்கணக்கு ஆரம்பிக்கும் தினமாகவும் கொள்ளப்படுகின்றது. விளக்கு திருமகளாக வணங்கப்படும் வழக்குப்பற்றி தீபவழிபாடு திருமகள் வழிபாடாகக் கருதப்படுகின்றது போலும். திருமகள் செல்வத்துக்கின்றியமையாதவளாதலின், செல்வத்துக்கு வேண்டிய வரவு செலவுக் கணக்கும் அன்றைக்கு வணிகர்களாலே தொடங்கப்பட்டு வருகின்றது.

யான் முன்னர்க்கூறிய நரகாசுரனுடைய கதை, சிறந்தோர் உட்பொருளை விளக்குவதாகக் கொள்வாருமுளர். 'நரகனென்பது உயிர்களைப் பிடித்திருக்கும் மலங்களென்றும், அவனுடைய கட்டளைகளாகிய ஆசாரக்கேடும் பாவச்செயல்களும் பாவங்களென்றும், அவனைக் கொன்ற விஷ்ணு சிவபெருமானது திருவருளென்றும், அவன் கொல்லப்பட மனிதர் புண்ணியவான்களாய் மல நீக்கத்தாற் சிவானந்தத்தைப் பெறுதலென்றும் இக்கதை குறிப்பாக விளக்குவதென்பர்' என்று புலோலி ஸ்ரீ சு. சிவபாதசுந்தரம் அவர்கள் "சைவக்கிரியை விளக்கம்" எனும் நூலிற் கூறுகின்றார்கள். இத்தகைய உட்பொருள் எல்லாக் கொண்டாட்டத்துக்கும் இயைபுபடுத்திக் கூறக்கூடிய முறையில் அமைந்திருக்கின்றது.

இத்தீபாவளிப் பண்டிகை சாதிசமயக் கட்டுப்பாட்டுக்கப்பாற்பட்டு, பாரதநாட்டு மக்கள் யாவர்க்கும் பொதுவானதெனப் பாடி மகிழ்கின்றார் இக்காலத்துப் புலவர் திலகம் தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள்.

தீபாவளிப்பண்டிகை

பண்டிகை தீபாவளிப் பண்டிகையாம்—இந்தப்
பாரதநாட்டிற்கோர் பண்டிகையாம்
தண்டிகை மன்னர் ஏழை எளியவர்
சந்தோஷம் கொண்டாடும் பண்டிகையாம்
ஆண்டிலோர் தீபாவளியாமடா—அதை
ஆண்டியும் கொண்டாட வேண்டுமடா
நீண்டுயர்போகும் நாளிதடா—உள்ளம்
தேடித் தவிடும் நாளிதடா
வாழத் தயங்குமிக் காலத்திலே—துளி
வாழ்வையளித்திடும் நாளிதடா
ஏழைக்கிரங்கி நரகாசுரன்—முன்னம்
இசைவை வேண்டிய நாளிதடா
........

பல்வேறு வகைப்பட்ட பாரத மக்கள் ஒருங்கு சேர்ந்து கொண்டாடும் பெரும்பண்டிகையாக விளங்கவேண்டுமெனக் கருதுவதும் சிறந்ததொன்றாகும்.

தீபாவளிப் பண்டிகையின் வரலாறுபற்றிப் பல்வேறு கொள்கை விருப்பினும், மக்களுக்குற்ற துன்பம் நீங்கியதால், இறைவனை வழிபட்டு ஏனைய உயிர்களுக்குத் துன்பஞ் செய்யாது வாழவேண்டுமென்பதை நினைப்பூட்டும் தினமாகக் கொள்வது மக்களுக்கு உறுதிபயக்கும் என்பதில் கொள்கை வேறுபாடிராதென்று நம்புகிறேன். மேலும், தீபாவலியின் பெயரும் கதைகளும் கருத்துக்களும் கொண்டாட்டங்களும் எவ்வாறிருப்பினும், சைவ மக்கள் இன்று ஞானவிளக்கு வழிபாட்டு நாள் என்று இனிமேல் இத்தீபாவலியைக் கொண்டாடி வருவது மிகவும் பயன்படத்தக்கதாயிருக்கும். ஏனெனில், சைவமக்களுடைய உள்ளந்தோறும் சைவசித்தாந்த ஞானதீபத்தைக் கொளுத்திய பெருஞான விளக்காகிய மெய்கண்ட நாயனார் உலகத்தில் தோன்றியருளிய நல்லநாள் இத்தீபாவலி நாளேயாகும்.

இத்தகைய புண்ணிய தினத்தை இக்காலத்தில் இந்துக்களுட் பெரும்பாலோர் எங்ஙனம் கொண்டாடி வருகின்றார்கள் என்பதையும் சிறிது கவனிப்பாம். தீபாவலித் தினத்தன்று கொன்று புசித்து மகிழ்வதற்கென்றே சிலர் ஆடு, கோழிகளை வளர்க்கிறார்கள்; அன்றேல் அத்தினத்துக்குச் சில நாட்களுக்கு முன்னர் பெருவிலை கொடுத்து வாங்கிச் சேமித்து வைத்துக்கொள்கின்றார்கள். இதற்குத் துணையாக பிராண்டி, விஸ்கி போன்ற மேனாட்டுக் குடிவகைகள் இக்காலத்தில் பெறலருமையாதலின், பழஞ்சாராயம் ஒருபோத்தலும் தேடி எடுத்து விடுகின்றார்கள். சாராயம் ஒரு போத்தல் எடுப்பதற்குச் சனங்கள் படும் துன்பத்தையும், செய்யும் முயற்சியையும் சூழ்ச்சிகளையும் நோக்குமிடத்து, அவற்றில் ஆயிரத்திலொரு பங்களவேனும் இறைவனுடைய அளப்பருங்கருணை வெள்ளத்திற் பருகித் திளைப்பதற்கு முயற்சிக்கின்றார்களில்லையேயென யாம் வருந்த வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. 'மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே' என மாணிக்கவாசக சுவாமிகளாதல் மேனெறித ஞானியாதல் தம்வாணாள் முழுவதும் கதறித் திரிந்தாலும் கவனிப்பவர் ஒருவரில்லை. ஆனால், 'சாராயப்போத்தல்வழங்குகின்றான்' என்று தெருவில் நிற்பவன் சொன்னாற் போதுமானது. 'வந்து முந்துமினே' என்றுகூடச் சொல்லத் தேவையில்லை. மது அருந்துவதும், புலாலுண்ணுவதும், சூதாடுவதுமே இத்தினத்தில் செய்யுங் கருமங்களாக இருக்கின்றன. இந்துக்களிற் பெரியவர்கள் இப்புண்ணிய தினத்திலாவது இத்தகைய தீச்செயல்கள் நிகழாமற் பாதுகாத்தல் கடமையாகும். இந்து வாலிப சங்கங்களும் இத்துறையில் ஊக்கமெடுத்தல் வேண்டும். துண்டுப் பிரசுரம் இலவசமாக வழங்கல், சொற்பொழிவாற்றல் ஆதியாம் கருவிகள் வாயிலாக இப்புண்ணிய தினத்திலாவது நற்செயல்களைச் செய்யுமாறு தூண்டிவிடல் வேண்டும். இங்ஙனம் விசேஷ தினங்களிலாவது தீச்செயல்களை நிறுத்திவிட முயற்சிப்பவன் ஒருவன் ஈற்றில் அவை யாவற்றையும் எந்நாளுமே தலையெடுக்காவண்ணம் களைந்துவிட முடியும்.

ஆண்டுக்கொருமுறை வரும் இப்புண்ணிய தினத்தில், புண்ணியம் ஈட்டுவதற்குப்பதிலாகப் பாவமீட்டி நாங்கள் வந்த நோக்கத்தை முற்றாக மறந்து வாழ்கின்றோம், ஆறக்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

# பண்டைத்தமிழரின் சமயம்

திருமயிலை, திருவாளர் சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளை

(முற்றொடர்)

மனித வழிபாடு

இவ்வுலகின் எல்லாச் சிருஷ்டிவர்க்கங்களினும் மனிதன் உயர்ந்தவன். ஏனைய சிருஷ்டிகளினும் இவன் சிறப்புற்று விளங்குவதன் காரணம் இவனிடத்து ஏனையவற்றைக்காட்டிலும் சித்சொரூபம் மிகுதிப்பட்டிருப்பதனாலேயாம்; கடவுள் சித்சொரூபியாதலால் சித்தறிவுடைய உயிர்கள் சித்சக்தியை அவரிடமிருந்து தங்கள் தங்கள் அளவுக்கேற்றபடி பெற்றுக்கொள்ளுகின்றன. இறைவன் அறிவுக்களஞ்சியமாய் விளங்குகின்றனர். சித்சொரூபம் அல்லது விவேகம் எங்கெங்கே மிகுதியாகக் காணப்படுகின்றதோ அங்கங்கே கடவுளின் அருட்சக்தி அதிகமாகத் துலங்கும். கடவுளின் அருளை நாடுவதே குறிக்கோளாகக் கொண்ட நமது மூதாதைகள் அவ்வருட் சக்தி எவ்வெவ்விடத்தில் முனைத்துக் காணப்படுகின்றதோ அவ்வெல்லாம் அதனைத் தொடர்ந்தனர். சித்சொரூபம் அல்லது தெய்வீகம் மனிதர்களிடத்தே அதிகப்பட விளங்குவதால் கடவுளின அருட்பிரகாசம் மனிதர்களிடத்தே விளக்கமுறுவது அதிசயமன்று. இந்த சாத்திரத்தின்படி, மனிதனுடைய சித்சொரூபம் அவனுடைய ஸ்தூல தேகத்தால் புலனாகும், மனிதனுடைய சரீரம் அண்டத்தைக் குறிப்பதாகும். கடவுளின் விசுவரூபம் இவ்வண்டமாகிய பரந்த உலகமாகும். தத்துவசாஸ்திர வல்லுனர் அண்டத்திற்கும் பிண்டத்திற்குமுள்ள ஒற்றுமையை நன்கு தெரிப்பர். ஒவ்வொரு உயிருள்ள பிராணியும் கீழ்ப்பிறவியிலிருந்து மேற்பிறவியைக் காலாந்தரத்தில் எடுக்கின்றது. சிறு பூச்சி பெரிய மிருகப் பிறப்பை அடைகின்றது. படிப்படியாக உயர்ந்து கடைசியில மேலான மனிதப் பிறவியை எடுக்கின்றது. ஒவ்வொரு உயிருள்ள பொருளும் தனது சித்சொரூபத்தைச் சிறிது சிறிதாக வளர்த்துக்கொண்டே சென்று கடவுளின் அருளை அதற்கேற்றபடி அடைகின்றது. கடைசியாக மனிதப் பிறவியை எடுத்தபோது கடவுளின் அருட்சக்தி பலப்படுகின்றது. மனிதர்களிலும் கடவுட்பக்தியுடையவர்களிடத்து ஏனையவர்களிடத்திலும் பார்க்க மிகுதிப்பட்டு விளங்குகின்றது. கடவுட்சக்தி அதிகமாகத் தங்களிடத்துடையவர்கள் ஏனையோர்களால வணங்கப்படுவதினாலென்ன குறை? கடவுளின் அருள் மனிதனிடத்தில் ஏனைய உயிர்களைவிட மிகுதியாகக் காணப்படுவதினால் அவனுடைய அறிவு விருத்தி பெற்று நல்லது கெட்டது என்பதைப் பகுத்தறியக் கூடியவனுமிருக்கின்றான். இப்படியிருந்தும் அவன் மலத்தால் தாக்கப்பட்டவனும் கடவுளின் அருளைப் பெறுவதில் அம்மலத்தால் பந்திக்கப்பட்டவனுமாகின்றான். அவன் கடவுளின் அருட்சத்தியைப் புசிக்கும்போது மலமும் அவனோடு தொடர்புடையதாயுள்ளது. மலத்தொடர்பின் வன்மைக்கு ஏற்றபடி அவனுடைய செய்கைகளும் எண்ணங்களும் முன்னுந்தப்படுகின்றன. அவன் தீய காரியங்களைச் செய்ய உத்தேசிக்கும்போது அவனைத் தாக்கும் மலத்தைத் தாமதகுணத்தென்போம். நற்கருமங்களைச் செய்ய விரும்பும்போது மலத்தொடக்கை இராசசம் என்கிறோம். நல்லதும் தீயதும் சமமாக இருந்தால் சாத்விகமெனகிறோம். மனிதன் எவ்வளவுக் கெவ்வளவு அருளைப் பெறுகின்றானோ அவ்வளவுக் கவ்வளவு மலசக்தி மங்குகின்றது. இராஜச சாத்விக குணங்கள் அதிகப்படுமாயின் கடவுளின் அருட்சத்தியை அதிகமாய்ப் பெறலாம். இக்குணங்களிற் சிறந்து கடவுளின் அருளை அதிகமாய்ப் பெற்றிருப்பவனை அவனிடத்துள்ள கடவுளின் அருட்பிரகாசத்தின் நிமித்தம் பூசிக்கின்றோம். இத்தகைய அருளாளனை வணங்குவது கடவுளை வணங்கியதாகும். உலோகாயதர்கள் இதனைத் திரித்துணர்ந்து கொண்டு தமிழர்கள் முற்காலத்தில் மனிதர்களை வணங்கினதாகக் குறை கூறுகின்றார்கள். கடவுளின் அருட்பெருக்கத்தையும் அதற்கும் ஜகத்திற்கும் உள்ள சம்பந்தத்தையும் அவர்கள் நன்குணராமையினால் இவ்வாறுதத் தப்பெண்ணங்கொள்ளலாயினர்.

நமது தாய் தந்தையரையும், குருமார்களையும், அரசர்களையும், பெரியோர்களையும் நாம் மரியாதையுடன் நடத்துவது அவர்களிடத்துள்ள அருட்சத்தியின் பொருட்டாம். இம்மரியாதையை மனித வணக்கமென்று கூறலாமோ? மேற்கூறியவர்களிடத்துச் செலுத்தும் மரியாதையை ஏனையோர் உபசாரமாகக் கொள்ளலாம் ஆனால் இந்துக்களிடத்தில் இது உபசாரமன்று. சமயக் கோட்பாடுகளில் நியமிக்கப்பட்டதாம். (தொடரும்)

## தீபாவலித் திருநாள்

நிகழும் ஐப்பசிமாசம் ௧௧ திகதி (28-10-43) வியாழக்கிழமை பிற்பகல் 6 மணியளவில் மேட்டுத்தெருவிலுள்ள கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் தீபாவலித் தினம் கொண்டாடப்பட்டது. அன்று நடந்த கூட்டத்திற்குச் சபையின் உப அக்கிராசனர் அத்துவக்காத் திரு. க. நடராசா அவர்கள் தலைமை வகித்தார்கள். சபையின் பூஜாக்கிருகத்தில் ஆராதனை நிகழ்ந்த பின்னர் திரு. க. நடராசா அவர்கள் நம் வாழ்க்கையின் நோக்கத்தைப் பற்றியும் இத்தகைய விழாக்களை நாம் ஏன் கொண்டாடுதல் வேண்டுமென்பது பற்றியும் விரிவாக எடுத்து விளக்கினார். பின் சுப்பிறீம் கோட்டு முதலியார் திரு. செ. சின்னத்தம்பி அவர்கள் தீபாவலி தீமை ஒழிந்து நன்மை பெருகுதற்காகக் கொண்டாடப்படும் ஓர் வெற்றிவிழா எனவும் இதனை நாம் தக்கமுறையிற் கொண்டாடவேண்டுமெனவும் கூறினார். திரு. வே. மயில்வாகனமவர்கள் நரகாசுர சங்காரத்தை விவரித்துத் தீபாவலியின் பெருமையை எடுத்துக் கூறினர். அதன்பின்னர், விவேகானந்த வித்தியாலய மாணவ மாணவிகள் தோத்திர பாராயணம் கும்மி முதலிய நிகழ்ச்சிகளால் சபையோரை மகிழ்வித்தனர். ஈற்றில், பிறக்றர் திரு. பெருமாள்பிள்ளை அவர்கள் எல்லோர்க்கும் நன்றி கூறியபின் சபையில் குழுமியிருந்த அன்பர்கள் சகலருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. அதன்பின்னர், தேவார பாராயணத்துடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

## வியாபாரத்திற் கழகு விளம்பரஞ் செய்தல்

## தீபாவலி

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ருக் தருணத்தில் நரகாசுரனுக்கு ஏற்பட்ட நல்லுணர்ச்சி ஆண்டுக்கொருமுறையாவது எங்களுக்கு ஏற்படவேண்டும். ஐம்பொறித் தகளிகொண்ட காளாமணி விளக்கேற்றி சிவஞானிய சிவலிங்கத்தைக் கண்டின்புற்றிருக்க முயலுதல் வேண்டும்.

நம்நாட்டில் பண்டைக்காலந் தொடக்கமாகக் கொண்டாடப்பட்டு வரும் இத் தீபாவலிப் பண்டிகை எங்ஙனம் ஆரம்பமாயிற்று என்பதை அறிந்து கொள்வதைப் பார்க்கிலும், இத்தினத்தை இறைவனுடைய திருவடிச் சிந்தனையில் எங்ஙனம் பயன்படுத்தலாமென ஒவ்வொருவரும் தத்தமக்கேற்ற முறையில் ஆராய்ந்து அவ்வழியைக் கடைப்பிடித் தொழுகலே சிறந்ததென அடியேனுக்குப் படுகின்றது. ஒரு தினமாவது ஒரு சிறுபொழுதாவது இறைவன் திருநாமத்தை ஓதிப் பாருங்கள்; உங்களுடைய வாழ்வில் ஒரு முறையாவது சைவத் திருமுறைகளை ஓதிப் பாருங்கள்; காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதிவாருங்கள். இங்ஙனம் செய்துவரின் உங்கள் வாழ்வில், உங்கள் உள்ளத்தில் ஏற்படும் மாற்றத்தைக் கண்டு நீங்களே அதிசயப்படுவீர்கள்.

வடஇந்தியாவில் இத்தினம் புதுக்கணக்கு ஆரம்பிக்கும் தினமாகவும் கொண்டாடப்படுகின்றதென முன்னர்க் கூறினேன். எங்கள் வாழ்க்கைக் கணக்குப் புத்தகத்தில், பாவச் செயல்களாகிய கடனைக் கூட்டிக் கொள்ளாமல், புண்ணியச் செயல்களாகிய வருவாயைக் கூட்டிக்கொள்ள வேண்டும். அப் புத்தகத்தில், புதியதொரு பக்கத்தை ஆரம்பிக்கும்பொழுது, "இன்று தொடக்கம் என்னிடமுள்ள தீய குணங்களை ஒழித்துவிடுவேன். இவற்றுக்குப் பதிலாக நற்குணங்களை ஏற்றுக்கொள்வேன்" என்ற விரதத்துடன் முயற்சித்துப் பார்த்து, அடுத்த தீபாவலியன்று வரவு செலவுக் கணக்கை மீளவும் சரிபார்த்துக் கொள்ள வேண்டும். இதுவே நாம் செய்ய வேண்டிய முக்கியமான விஷயம். நாங்கள் இவ்வுலகில் வந்த முக்கிய நோக்கத்தை மறந்து வீண் ஆராய்ச்சிகளில் இறங்கி கரை காணமுடியாது தவிக்கின்றோம். இதனை ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்சர் அழகியதொரு சிறு கதை மூலம் விளக்கியிருக்கின்றார். அதனையும் எடுத்துக்காட்டி, எங்கள் நோக்கத்தை இதனைத் தில் நினைப்பூட்ட விரும்புகிறேன்: "இரண்டு நண்பர்கள் ஒரு தோட்டத்திற்குள் சென்றனர். உலக விஷயங்களில் ஊன்றிய கவனம் உள்ளவனான சிநேகிதன் உடனே அங்குள்ள மாமரங்களை எண்ணி ஒவ்வொரு மரத்திலும் எத்தனை காய்கள் இருக்கின்றனவென்று பார்த்து, அந்தத் தோட்டத்தின் சுமார் மதிப்பு எவ்வளவிருக்குமென்று திட்டம் போடத் தொடங்கினான். அவனுடைய துணைவனோ தோட்டக்காரனிடம் சிநேகம் செய்துகொண்டு ஒரு மரத்தடிக்குப் போய்ச் சில பழங்களைப் பறித்துத் தின்னத் தொடங்கினான். இவ்விருவரின் அதிக ஞானமுள்ளவன் எவன்? மாம்பழங்களைச் சாப்பிடு; அதனால் உன் பசியடங்கும். மரங்களையும் இலைகளையும் எண்ணி விலைகணக்குப் பார்ப்பதில் என்ன பிரயோசனம்? புத்தி வன்மையால் கர்வமடைந்தவன் ஈசுவரசிருஷ்டி எப்படி, எங்கிருந்து உண்டாயிற்று என்பதைக் கண்டு பிடிப்பதில் வீணாய்ப் பாடுபடுகிறான். ஞானத்திலும் அடக்கமுள்ளவனாகிய ராமனோடு உறவுகொண்டாடி பிரதிசயா கந்தமாகிற அவனுடைய வரப்பிரஸாதத்தை அனுபவிக்கிறான்" இச் சிறுகதை நாம செய்யவேண்டியதை எவ்வளவு தெளிவாகக் காட்டுகின்றது.

அனுபவஞானமுடையார் கூறும் கதைகளுக்கும் ஆக்காலத்தில் மலிந்து கிடக்கும் வெறுங் கதைகளுக்குமுள்ள வேற்றுமையினை அறிஞர்களாகிய நீங்களே தெரிந்து கொள்ளலாம்.

எனவே, இறைவன் திருவடி நீழலை அடையும் முயற்சியில் யாம் ஈடுபடுதலே எங்கள் முதலிய நோக்கமாயிருத்தல் வேண்டும். இதற்குக் கருவியாக இக்கொண்டாட்டங்கள் அமைதல் வேண்டும்.

## நன்னூல்

இது பாயிரமொழிய எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என இரண்டு அதிகாரங்களையும், ஓரதிகாரத்து ஐந்து இயல்களையும் உடையதாயும், இவ்விரண்டதிகாரங்களையுங் கற்போர்க்குப் பெரிதும் பயன்படுவதாயுமிருக்கின்றது. தொல்காப்பியமென்னும் பேரிலக்கண நூலைக் கற்போரும் முன் இதனையே கற்று அதன்மேற்றான் கற்கின்றார்கள். இதன்கணுள்ள இரண்டதிகாரத்துள் எழுத்ததிகாரத்துள்ள பதவியலொன்றும் வடநூன் மேற்கோளாகவும், ஏனைய தொல்காப்பிய மேற்கோளாகவும் செய்யப்பட்டுள்ளன. இதற்குப் பெரிதுந் தொல்காப்பியமே முதனூலென்பதற்கு இதன்கணமைந்துள்ள தொல்காப்பியச் சூத்திரங்களே சான்று பகர்கின்றன. இதன் ஆக்கியோனாகிய பவணந்தி முனிவர் வழிவகையிற் றவறுமென்பதற்கு அவர் பொதுப்பாயிரத்துக் கூறிய "முன்னோர் மொழிபொருளேயன்றி" எனும் அடிமுதற் செய்யுளே சான்றாகும். ஆதலின் இதற்கு உரை காண்போரும் தொல்காப்பியத்துக்கு விரோதமில்லாவகை காண்டலே தகுதியெனப்படுதலின் அரிதாக விரோதமுறத் தோன்றும் பகுதியில் விரோதமறக் காட்டுவல். தொல்காப்பியர் அளபெடை கூறுமிடத்துக் 'குன்றிசை மொழிவயினின்றிசை நிறைக்கும், நெட்டெழுத்திம்பர் ஒத்த குற்றெழுத்தே. நீட்டம் வேண்டின் அவ்வளபுடைய, கூட்டியெழூஉத லென்மனார் புலவர். மூவளபிசைத்த லோரெழுத்தின்றே' என வரையறுத்ததுவிரத் தமது கொள்கையன்றதமது ஆசிரியர்கொள்கையதுவே என்பது தோன்றவுங் கூறியுளார். பவணந்திமுனிவர் அவ்வளபெடை கூறுமிடத்து 'இசைகெடின் மொழிமுத லிடை கடை நிலைநெடில், அளபெழுமவற்றவற் றினக்குறில் குறியே' என அது விரித்து விளங்கச் சூத்திரஞ் செய்தனர். உரைகண்டார் மாறுகொளக் கொண்டனர். மாறுகோளில்லுரை வருமாறு. இசைகெடின் செய்யுளின் ஓசை குன்றின மொழிமுதல் இடை கடை நிலைநெடில் இம்மூவிடத்து நிற்கும் நெட்டெழுத்துக்களேழும், அவற்றவற்றனக்குறில் அளபெழும். தத்தமக்கு இனமாகிய குற்றெழுத்துக்களோடு கூடி அவ்வோசையை நிறைத்தற் பொருட்டுத் தத்தம மாத்திரையின் மிக்கொலிக்கும். இனக்குறிலே குறி. அப்படி அளபெடுத்தமையை அறிதற்கு வரிவடிவில் அவ்வோசைக்குறிலே அறிகுறியுமாம். எ-று.

இவ்வாறு நேருநேருஞ் சேர்த்தாற்போலக் குற்றெழுத்தோடு நெட்டெழுத்தொத்து நின்று நீண்டிசையாவடினே 'குற்றுயிரளபி னீறாம்' என்றல் பொருந்தாது; இட்ட அலடையாளத்தோ டிசைமன்றல் கூடாமையின் இது கருத்தாயதின்மை.

"அவ்வளபுடைய" என்றமையின் மூன்று மாத்திரையினும் மிக்கு நான்கு மாத்திரையாக நீளவேண்டுமாயின் குற்றெழுத்தை இருகாற் கூட்டி எழுப்பல் வேண்டுமென்பதும் பெற்றும். குறியே என்பதின் ஏகாரம் குறில் என்பதொடு கொண்டு கூட்டாயிற்று.

மற்றும் உரைவழு. "தற்சுட்டளபொழி" என்பதற்குத் தற்சுட்டு ஐயுமளபெடையுமொழிய எனப் பொருள் கோடலே தகுதி. அளபெடையுமொழிய என எடுத்தோதாது தன்பெயர் சொல்லுமளவிற்குறுகாது எனப் பொருள் கொண்டால் ஐகாரம் அளபெடுக்குமெனக் பெறப்படாது. இது ஔகாரத்திற்குமமையும். மற்றையிடமெல்லாங் குறுகுமென்றமையின் 'அளபெடை தனியிரண்டல்வழி யையௌ வளவுதானொன்றரை தனிமையு மாகும்" என்னும் அதிசயமும் இதனை வலியுறுத்தல் காண்க. இதற்குச் சிவஞானமுனிவர் எழுதிய மறுப்பு அளவைமாறாகும். அன்றியும் அளபு எனப் பட்டங்கொண்டு அளபெடைப் பொருள் கோடலும் பொருந்தாதாம். இதற்குச் சங்கரநமச்சிவாயப்புலவர் கொண்ட பாடமும், உரையும் இதனான் மறுக்கப்பட்டமையுங் காண்க. "குறில் செறியாலள வல்வழி வக்த, தகரந் திரிந்த பிற்கேடு மீரிடத்தும், வருநத்திரிந்தபின் மாய்வும்" என்பதில திரிந்தபிற் கேடும், திரிந்தபின் மாய்வும் என்பவற்றுக்குத் திரியுமிடத்துக் கெடுதலும் எனப் பொருள் கொண்டு திரியுமுன்கெடுவனவற்றைத் திரிந்தபிற் கேடுமென்றது காலவழுவமைதி, என்றது மாறுகொளக் கூறலாம். திரியுமுன்கெடும் என்பது நூலாசிரியர் கருத்தாயின் திரியுமுன் கெடும் என்றும், திரியுமிடத்துக் கெடும் என்பது கருத்தாயின் திரிவுழிக் கெடும் என்றும் உரைத்திருக்கலாமே. அங்ஙனம் உரையாமையின் இவையிரண்டும் ஆசிரியர் கருத்தன்மையறிக. அன்றியும் 'தாழ் கோல் தொழுதான்' என்புழி வருமொழி முதலிலுள்ள தகரம் டகாரமாகத் திரிந்ததன் மேல் நிலைமொழியீற்றிலுள்ள ளகரம் அந்த டகாரத்தோடு புணர்ந்தவிசைக்கலாகாமையிற் கெடுவதாயிற்று. திரியுமுன்கெடுதல், அல்லது திரிவுழிக்கெடுதல் யாது பற்றியோ? அன்றியும் "குறிலணைவில்லா ளனக்கள் வந்த, நகரந் திரிந்துழி நண்ணுங் கேடே" என்பதற்கும் அவ்வாறு பொருளுரையாததென்னை? இரண்டற்கும் வேறுபாடென்னை? அஆவீற்ற பலவின படர்க்கையாவேவல் எதிர்மறைக்கண்ணதாகும்" என்பதில் ஆவெதிர்மறைக் கண்ணதாகும் என்றமையின் ஆகாரம் உடன்பாடெதிர்மறை யிரண்டிலும் வருமெனப் பொருள்கொண்டு எதிர்மறைக்கு உடக்கின்றிலன்,' "உடக்கின்றிலன்" என உதாரணங்காட்டினர். இவற்றில் இல் என்னும் இடைநிலையே எதிர்மறைப் பொருட்டாதலின் ஆகாரம் எதிர்மறையில் வந்ததென்றல் வழுவாம்.

தொடரும்

வி. ஏகாம்பரநாதன்,
மீசாலை


# பல் வைத்தியம்

### யாழ்ப்பாணம்

பல் வைத்தியம் செய்யவும் கண் பரிசோதனை செய்யவும் தத்துவம்பெற்றவரான திரு. எஸ். சாள்ஸ் பத்திநாதர் அவர்கள் வருஷத்தின் எல்லா மாசங்களிலும் 3-ந் திகதி தொடக்கம் 15-ந் திகதிவரையும் யாழ்ப்பாணம், பெரிய தெரு 43ம் இலக்கத்திலுள்ள வைத்திய சாலையில் கருமம் நடாத்துவார்.

### குருநாகல் கிளைஸ்தாபனம்

மாசத்தின் 20ந் திகதியிலிருந்து 30-ந் திகதி வரையும் குருநாகல் கோட்டுவீட்டுக்கு முன்னுள்ள பல்வைத்திய கிளைஸ்தாபனத்தில் கருமம் நடாத்துவார்.

யாழ்ப்பாணத்தில் அவரிடம் வைத்தியம் செய்விப்போர் முன் ஒழுங்குகள் செய்யவேண்டில் அவருடைய குருநாகல் விலாசத்துக்கு எழுதுதல் நல்லது,

(Mis. 98. 5.8—31.12.43)


## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத்தட்டு)

### செவ்வாய் நவ 9

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில்செய்திகள் 8 இரு தாலிசை† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 ஆர் மீனும்பாள் வீணை 9முடிவு.

1 கதம்பம்† 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஸி ஏ சுப்பிரமணிய பாகவதர் பாட்டு 2 தமிழில் செய்திகள்2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 ஸி ஏ சுப்ரமணியபாகவதர் பாட்டு 5-45இசைப்பயிற்சி 6 டி ரங்கம்மாள் வீணை 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 நாமும் யுத்தமும் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில்செய்திகள் 7-45 புதுவீடு பழையவீடானது நாடகம் 8 மதராஸில் உள்ளபடி (பி எஸ் வேதாசலம்பாட்டு) 9.15 திருவெண்காடுசுப்ரமணியபிள்ளை நாகஸ்வரம்† 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9.45 டி ஜி சங்காகோபாலன் புல்லாங்குழல் 10-00 இசைவேளை† 10-30 முடிவு.

### புதன் நவ 10

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில்செய்திகள் 8 திருச்சி வாத்யகோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 எச் ராமநாதன் பாட்டு 9முடிவு.

1 கதம்பம்† 1-30ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எச் ராமநாதன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 ஆர் பத்மநாப ஐயர் புல்லாங்குழல் 5-45 இசைப்பயிற்சி 6 மைலம் வஜ்ரவேலு முதலியார் பாட்டு 6.30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 தாளவாத்ய கச்சேரி 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7.45 ஆர் பத்மநாபஐயர் புல்லாங்குழல் 8-30 அமெரிக்க வாத்தியம் 8-45 மைலம் வஜ்ரவேலு முதலியார் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 நான்கு வயலின்கள் 10இசைவேளை† 10-30முடிவு.

### வியாழன் நவ 11

காலை: 7-45 கீதாரம்பம்† 7-50 தமிழில் செய்திகள் 8 தந்திஇசை† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 திருச்சேறை ஆர் கிருஷ்ணமூர்த்திப் பிள்ளை பாட்டு 9 முடிவு.

1 கதம்பம்† 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 ஸி எல் சக்கரபாணி வயலின் 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை: 5 ஸி எல் சக்கரபாணி வயலின் 5-45 இசைப்பயிற்சி 6 திருச்சேறை ஆர் கிருஷ்ணமூர்த்திப் பிள்ளை பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 செய்தி விளக்கம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 கடந்தூர் சங்கரராமய்யர் வீணை 8 மதராஸில் உள்ளபடி (பாலமுரளி கிருஷ்ண பாட்டு) 8-30 டி வி கிருஷ்ணமூர்த்தி பாட்டு 9 கலைவிவாதம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்துசெய்திகள் 9-45 நாடகம் 10 ஐரோப்பிய சங்கீதம் 10-30 முடிவு.

## சாராயவிலை அதிகரிப்பு சட்ட ரீதியானதா?

### அரசாங்கசபையில்நடைபெற்ற விவாதம்

### பண்ணைப் பாலத்துக்கு ரூ. 6 லட்சம்

சென்றவியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்குத் தலைவர் சேர். டபிள்யூ. துரைசுவாமி தலைமையில் அரசாங்க சபை கூடியபொழுது உள்நாட்டு மந்திரியின் நிர்வாகசபை சாராய விலையை உயர்த்தியது சட்டரீதியாகுமா என்னும் பிரச்னை விவாதத்துக் கெடுத்துக்கொள்ளப்பட்டது.

மந்திரிசபையின் நடவடிக்கை சட்டரீதியானதா என்பதுபற்றிச் சந்தேகிக்கப்படுவதாலும், சாராய விலையை உயர்த்தியது சட்டரீதியாகுமா என்பதுபற்றிப் பொது ஜனங்கள் அறிய ஆவலாயிருப்பதாலும், உள்நாட்டு மந்திரி இதுபற்றி விளக்கிக் கூற முடியுமாவென்று மிஸ்டர். டி. எஸ். டி. பொன்சேகா தலைவரின் அனுமதியுடன் வினவினர்.

அதற்குத் திரு. மகாதேவா அளித்த பதில் பின்வருமாறு:-

"முன்தினம் இப் பிரச்னைபற்றி விவாதம் நடைபெற்றதன் விளைவாக சட்ட நிபுணரின் அபிப்பிராயத்தை அறிந்துகொள்ளவேண்டுமென்னும் எண்ணம் எனக்கு உதித்தது. சட்டக்காரியதரிசி தமதபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கிறார்.

குறித்த நடவடிக்கை சட்டரீதியானதா என்று ஜனங்கள் அறிய விரும்பியதனால் நான் இவ்வறிக்கையைவாசிக்கவும், நிலைமையை விளக்கவும் விரும்பினேன். திரு. சிரிவர்தனவின் பிரேரணையை எனது நிர்வாகசபை ஆலோசித்தபின் பூரணமான அறிக்கையொன்றை நான் சமர்ப்பிப்பேன்."

நிர்வாகசபையின் அறிக்கை தயாரிக்கப்படுவதை எதிர்பார்த்து அடுத்த சாராய விநியோகத்தின் போது விலையைக் குறைத்து முந்திய விலையையே விதிப்பது பற்றி மந்திரி ஆலோசிப்பாரா என்று மிஸ்டர், சைமன் அபயவிக்கிரமா வினவினர்.

இந்நிலைமையில் விலையைக் குறைப்பதற்கில்லையென்றும் நிர்வாகசபை ஏகமனதாக விலையை அதிகரித்திருக்கிறதென்றும் மந்திரி பதிலளித்தார்.

மிஸ்டர். எச். டி. இசற். சிரிவர்தன கேட்ட கேள்வியொன்றுக்குத் திரு. மகாதேவா பதிலளிக்கையில், தமது நடவடிக்கை சட்டரீதியாகுமா என்று சந்தேகிக்க இடமிருந்தால் தாம் விலையை அதிகரித்திருக்கமுடியாதென்று கூறினர்.

மதுவிலையைக் குறைப்பதனால் ஏழைகளுக்குத் தீங்கு விளையுமென்று மந்திரி கருதுகிறாரா வென்று திரு. ஜி. ஏ. விலேலே வினவினர். அதற்குப்பதிலளிக்கப்படவில்லை.

#### யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு ரூபா 68,000

யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் 34 படுக்கைகளுடைய பிரசவவிடுதியொன்றை அமைப்பதற்கு ரூபா 68,000 உபமான்யம் ஒதுக்கப்பட்டது.

அனுராதபுரப் பிரதிநிதியான திரு. எச். ஆர். பிரீமனுக்குத் தேக அசௌக்கியம் ஏற்பட்டிருப்பதை முன்னிட்டு அவருக்கு நவம்பர் 2க் தேதி முதல் 6வார லீவு அனுமதிக்கப்பட்டது.

---

## பருத்தித்துறைச் சைவ வாலிபர் இயக்க ஐந்தாம் ஆண்டு விழா

தீபாவளித் தினத்தன்று 28-10-43 வியாழக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் மேற் வாலிபர் ஆண்டுவிழா, சித்திவிநாயகர் வித்தியாசாலை மண்டபத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. 3 மணிதொடக்கம் 4½ மணி வரையும் விடாமழையாயிருந்தும், 5 மணிக்குப் பாடசாலையின் உள்ளும் புறமும் ஒரே ஜன சமுத்திரமாயிருந்தது.

அ. இ. ச. தொ. சங்கத் தலைவர் ஸ்ரீ. சிற்றம்பலம் அட்வகேற் அவர்கள் தலைமை வகித்தார். பண்டித ஸ்ரீ க. சச்சிதானந்தன் "தமிழன் கனவு" என்னும் விஷயம்பற்றி பாரதியாரின் லக்ஷியங்களைக் கூறினர். கோப்பாய்ச் சாதன பாடசாலை ஆசிரியர் பண்டித ஸ்ரீ பொ. கிருஷ்ணபிள்ளை "வேட்டுவப் பெருமக்கள்" என்னும் விஷயம்பற்றிப கண்ணப்பனையும் குகனையும் ஒப்பிட்டு எல்லோரும் ரஸிக்கும்படி பேசினர். அவரின் பல பிரசங்கங்களில இது முதன்மை வகிக்கத்தக்கதாய் இருந்தது.

வரிக்காடு சங்கீத ஆசிரியர் ஸ்ரீ A. நடராஜபிள்ளை அவர்களின் சங்கீதக் கச்சேரி மிக இனிமையும் சிறப்புமுடையதாயிருந்தது. அவர் யாழ்ப்பாணம் சங்கீத வித்வான்களுள் ஒரு பிரதான இடம் பெறக் கூடியவரெனத் தோற்றியது.

யாழ்ப்பாணம் ஸ்ரீ. W. N. குமாரசுவாமி அவர்களின் புத்திரி செல்வி அன்னலட்சுமி (Indian Music Diploma in Madras University) இனிய சங்கீதக் கச்சேரி நடத்தினர். சங்கீதத்தில் நிரம்பிய திறமையுடையவராகக் காணப்பட்டார்.

கோலாலம்பூர் சங்கீத அபிவிருத்திச் சபாவில் "சங்கீத பூஷணம்" பட்டம் பெற்றவரும், அச்சபாவின் ஸ்தாபகர் வி. இராமசாமி அவர்களின் புத்திரியுமான ஸ்ரீமதி. பரஞ்சோதி அம்மாள் ராசமாணிக்கம் "கீர்த்தி மாலினி" என்னும் கற்புக்கரசியின் சரிதத்தைக் கதாப்பிரசங்கம் செய்தார்கள். அவரின் குரலின் கம்பீரமும், சங்கீத ஞானமும், கதைசொல்லும் இனிமையும் எல்லாரையும் கவர்ந்தன. இரவு பதினொருமணி வரையில் எல்லாரும் மிக அமைதியாக இருந்தனர்.

தேவார பாராயணத்துடன் ஆண்டுவிழா இனிது நிறைவேறியது.

—கடித

---

#### புகையிலைவரி அதிகரிப்பு

சமீபத்தில் அதிகரிக்கப்பட்ட புகையிலை வரியை அங்கீகரிக்கும்படி கோரி மிஸ்டர். எச். ஜே. ஹக்ஸாம் ஒரு பிரேரணையைக் கொண்டுவந்தார். இது நிறைவேறியது.

வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கு இதுவாவழி என்று மிஸ்டர். எச். டபிள்யூ. அமரசூரியா கேட்டார்.

பின்னர், கடன்நிதியிலிருந்து சில செலவுகளுக்காக ரூ. 8338960 ஒதுக்கப்பட்டது.

#### பண்ணை-அல்லைப்பிட்டி திட்டத்துக்கு ரூபா 6 லட்சம்

பண்ணைக்கும் அல்லைப்பிட்டிக்கு மிடையே யாழ்ப்பாணப் பரவைக் கடலில் ஒரு பாலத்தை அமைக்க ரூபா 6 லட்சம் உபமான்யமாக அனுமதிக்கப்பட்டது.

மற்றும் சில அலுவல்கள் பூர்த்தியானதும் 16ம் தேதி பிற்பகல் 2 மணிவரை கூட்டம் பின்போடப்பட்டது.

---

## ஸ்டிராபோல்கியின் முயற்சி தோல்வி யடைந்தது

### இந்தியாவுக்குக் குடியேற்றநாட் டந்தஸ்து வழங்கும் 'மசோதா'

### பிரபுக்கள் சபையில் விவாதம்

லண்டன், நவ 5

வெஸ்ட் மினிஸ்டர் சட்டப்படி யமைந்த குடியேற்றநாட் டந்தஸ்து இந்தியாவுக்கு வழங்கப்பட வேண்டுமென்று கோரும்ஒருமசோதாவைத் தமது சொந்த முறையிற் பிரபுக்கள் சபையில விவாதிக்க ஒரு பிரபு முயன்றதோடு பிரபுக்கள் சபை நேற்று ஆரம்பமாயிற்று. அப்படி முயற்சித்த பிரபு, லோர்ட் ஸ்டாபோல்கியாவர். மசோதாவைச் சம்பிரதாய பூர்வமாக முதலாவது முறை வாசிக்க அவர் சபையின அனுமதியைக் கோரினர்.

#### டொமினியன் மந்திரியின் எதிர்ப்பு

டொமினியன் மந்திரி கிரான்போன் பிரபு மசோதாவை முதலாவதுமுறைவாசிப்பதை அரசாங்கத்தின்சார்பாக எதிர்த்தார். மசோதாவை முதலாவதுமுறை வாசிப்பதை எதிர்ப்பதுவழக்கத்திற்குமாறானதாயிருப்பினும் ஒருபிரபுசொந்தமுறையிற் செய்யப் பொருத்தமற்ற ஒரு காரியம் இருக்குமாயின், அது இந்த மசோதாதானென்று அவர் குறிப்பிட்டார். வெஸ்ட்மினிஸ்டர் சட்டப்படி அமைந்திருந்தும் ஒருமசோதாவைப்பிரேரிக்குமுன குடியேற்ற நாடுகளைக் கலந்துகொள்ள வேண்டுமென்றும் இந்த வேலையை அரசாங்கத்துக்கு விட்டுவிடுவது மிக நலலதென்றும் அவர் கூறினர்.

#### 'பைத்தியகாரத் தனமான முறை'

கிரான்போன் பிரபு தொடர்ந்து பேசியதாவது:-

"டொமியன்களோடு கலந்துபேசுவதற்கு ஸ்டிராபோல்கி பிரபுவுக்குச் சந்தர்ப்பங்கிடைத்திருக்கமுடியாது. டொமினியன்களைக் கலந்துகொள்ளாமல வெஸ்ட் மினிஸ்டர் சட்டத்தைத் திருத்த எத்தனிப்பது ஒரு பங்காளி ஏனைய பங்காளிகளைக் கலந்து கொள்ளாமல் தன்னிஷ்டப்படியே இன்னொரு பங்காளியை வியாபாரத்தில் கொண்டுவந்து சேர்க்க எத்தனிப்பது போலாகும்.

இந்தப் பைத்தியகாரத் தனமான முறையை ஸ்டிராபோல்கி பிரபு எப்படித்தெரிந்து கொண்டாரென்பதை என்னால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. இதற்குச் சபை அனுமதியளிக்கமாட்டாதென்று நானநிச்சயமாக நம்புகிறேன்"

#### ஸ்டிராபோல்கி பிரபு ஆச்சரிய மடையவில்லை

கிரான்போனபிரபு நடந்துகொண்ட விதத்தைத் தாம், சபை கூடுவதற்கு முன்பு அறிந்துகொள்ள முடியாதுபோய்விட்ட போதிலும், அவருடைய நடவடிக்கை முற்றும் எதிர்பார்க்கப்படாததல்ல வென்றும் இம்மாதிரி அவர் நடந்துகொள்வாரென்று முன்னமே தாம் ஓரளவு அறிந்திருந்ததாகவும் ஸ்டிராபோல்கிபிரபு குறிப்பிட்டார். இம் மசோதாவை முதலாவது முறை மாத்திரம்தான் வாசிக்கத் தாம எண்ணியிருப்பதாக ஏற்கெனவே அறிவித்துவிட்டதாகவும் முதலாவதுமுறை வாசித்த பின்பு மசோதாவை விசாரிக்கத் தமக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படுமென்று நம்புவதாகவும் அவர் கூறினர்.

தாம் தமது சொந்த முறையிலேயே இந்நடவடிக்கை எடுப்பதன்றித் தமது கட்சியின் (தொழிற்கட்சியின்)சார்பாகவல்லவென்றும் ஸ்டிராபோலகி பிரபு குறிப்பிட்டார்.

#### அரசியல் முறையைப் பற்றியதல்ல

"அரசியல் முறை டொமினியன் அந்தஸ்தைப் பாதிக்காது. வைஸ்ராயின் அதிகாரங்களில் எவ்வித மாற்றமும் செய்யாமலேயே இந்தியாவை நாளைக்கு ஒரு டொமினியன் என்றழைக்கலாம். எனது மசோதா இந்தியாவின் உள்நாட்டுநிலைமையைப்பற்றியதல்ல. பல பிரதான விஷயங்களில் இன்று இந்தியா ஒரு டொமியனைப் போலவே நடத்தப்படுகிறது. டொமினியன் அந்தஸ்து வழங்குவதுதான் இந்தியா சம்பந்தமாக அரசாங்கத்தின் கொள்கையென்று பல முறைகளில் திரும்பத் திரும்பப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், ஒரு தனிப்பட்ட அங்கத்தவரால் இது நடக்கமுடியாத காரியமென்றோ அல்லது இது அதற்குத் தகுந்த சந்தர்ப்பம் அல்லவென்றோ அரசாங்கம் கருதுமாயின் நான் இருந்துவிடுகிறேன்."

என்று ஸ்டிராபோல்கிபிரபு பேசிவிட்டு இந்தியாவின் நிலைமையை அபிவிருத்தி செய்யவும் அதன் குற்றங் குறைகளை நிவர்த்திக்கவும் அரசாங்கம் அவசியமான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமென்று தாம் நம்புவதாகவும் கூறினர்.

கிரான்போன் பிரபுவின் அறிக்கைக்குப் பிறகு மசோதாவைப் பிரேரிக்கத் தாம் விரும்பவில்லையென்று ஸ்டிராபோல்கி பிரபு கூறிவிட்டு இருந்துகொண்டார்.

---

## மோட்டார்க் கார்களின் விளக்கணைப்பு விதி

மோட்டார்க் கார்களின் விளக்கணைப்பு விதி சமீபத்தில் திருத்தியமைக்கப்பட்டிருக்கிறது. இதன் விவரம் சென்ற வியாழக்கிழமை வெளிவந்த கஜெற்றில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

---


## கேள்விப் பத்திரம்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்குக் கீழ்க் கண்ட பொருள்களைச் செய்து கொடுப்பதற்கு இம்மாதம் 22-ந் திகதி திங்கட்கிழமை பகல் 12மணி வரை கேள்விப்பத்திரங்கள் (Tenders) ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் சீல் செய்யப்பட்டு மேலுறையின் வலதுபக்க மூலையில் "மேசை கதிரைக்குரிய கேள்விப்பத்திரம்" என்று குறிக்கப்பட்டு, "பிரதமாசிரியர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி" என்ற விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும்:—

(1) 100 மாணவர்க்குரிய மேசை கதிரைகள்

(2) 1 கரும்பலகை

(3) 50 விடுதிச்சாலைப் படுக்கைகள்

மாதிரிப் பொருள்களும் (Samples) ஏனைய விபரங்களும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பிரதமாசிரியர் காரியாலயத்திற் பெற்றுக் கொள்ளலாம்.

மிகக் குறைந்த விலை கேட்கும் கேள்விப்பத்திரத்தையாவது அல்லது வேறு குறித்த எந்தக் கேள்விப்பத்திரத்தையாவது ஏற்றுக்கொள்ளப் பிரதமாசிரியர் கட்டுப்பட்டவரல்லர். (Mis. 153. 8-11-43)

## அரசு, வேப்பமரங்களின் கீழே நாகப்பிரதிஷ்டை செய்வதற்கு நியாயம்

பிரம்மஸ்ரீ. ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள் சுதுமலை

புத்திரபாக்கிய மில்லாதவர்கள் எவர்களோ அவர்கள் ஓர் அரச மரத்தை யுண்டாக்கி அதற்கு இடப்பக்கத்திலே ஒரு வேப்பங்கன்றையுமுண்டாக்கி முதல் அரசமரப் பிரதிஷ்டையும், உபாயனமும், அஸ்வத்தவிவாகமும் முறைப்படி சாஸ்திர முறைப்படி செய்து அதனடியில் இடப்பக்கத்திலே நாகப்பிரதிஷ்டை செய்ய வேண்டும்.

முறைப்படி ஒருவன் பிரமச்சரிய விரதத்தை யனுஷ்டித்து வரும்போது பிராரத்துவவசத்தால் இறப்பின் அவனே அரச மரமாகப் பிறக்கின்றனனென்று சாஸ்திரங்கள் கூறும். செந்தூர்ப் புராணத்திலும் மரங்களுள்ளே விசிட்டம் பொருந்திய அரசமரமாயிருப்பவனும் நானே என்று குமாரக்கடவுள் வீரவாகு தேவருக்கு உபதேசித்தார். எல்லா மரங்களுள்ளும் அதிவிசேஷமுளது என்பதற்காகவே 'அரசு' என்றார்கள். அரசு ஆணும் வேம்பு பெண்ணுமாம். வேப்பிலை மகாமாரிக்குரிய பத்திரமாகும். பாம்புவிஷம், பூதப்பிரேத பைசாசங்கள் நீங்கும் பொருட்டு மந்திரப் பிரயோகஞ் செய்யுங்காலத்திலும், மகாமாரியின் கும்பஸ்தாபனஞ் செய்யுமிடத்தும் பிரயோகிப்பார்கள். சத்துருநாசத்தின் பொருட்டு எண்ணிச் செய்யும் ஓமச்சமித்தாகவுமுள்ளது. இது பெண்விருட்சமாகும். சிவாம்சமானது, மகாமாரிகோயில்களில் இவ்வேம்பு சூழ்ந்திருக்கும். பேயினால் பீடிக்கப்பட்டவர்கள் நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் காலை மாலை இருவேளைகளிலும் பிரதட்சணம் செய்தால் சுகம் பெறுவர். இம்மரத்தின்மீது வீசி வரும் காற்று மிகவும் தேகசுகத்தைக் கொடுக்கும். இம்மரம் நிறைந்துள்ள இடங்களில் காய்ச்சல், தொற்றுநோய் வரா. நன்றாய்ப் பழுத்த பழம் சிவலிங்கம்போல விளங்கும். வேப்பம் பழங்களையெல்லாம் சிவபக்தியிற் சிறந்த வரகுணதேவர் சிவலிங்கத் திருமேனிகளாகக் கண்டதாக ஹாலாஸ்யபுராணமியம்புகூறும். இதனை "காய்பழுத்துதிர்ந்த கனியுருக்கண்டு, வேம்புகட் கெல்லாம் விதானமமைத்தும்" என்ற அடிகளது பாவினாலுமுணர்க. இம்மரத்தினது இலை, பட்டை, வேர், பூ, பழம், வித்து, பிண்ணாக்கு, ஈர்க்கு முதலியவை எல்லாம் ஔஷதகுண முடையது. இதன் தைலம் அநேக நோய்களைப் போக்கும். சன்னி கண்டவர்களுக்கு இதன் பிண்ணாக்கைக் கொளுத்தி அதன் புகையைக் காட்டினால் நீங்கிவிடும். குழந்தைகட்குப் பாலக்கிரகதோஷ நிவாரணத்தின் பொருட்டு மந்திரிக்க உபயோகமுள்ளது.

அரசு பிரமணனும், வேம்புபிராமணன் தேவியும் ஆவர். இந்த நியாயங்கொண்டே இந்த இரண்டிற்கும் கல்யாணஞ் செய்து வைத்தல் புண்ணியமென்று சொல்லப்படும்.

கிரகஸ்தர்களுக்கு இந்த இரண்டு விருட்சத்தின் வழிபாட்டினாலும் புத்திர பாக்கிய முதலிய சகல நன்மைகளுமுண்டாம். இந்த விசேஷத்தினாலுன இந்த மரங்களின் அடியில் மேடையுண்டாக்கி அதன் மேல் நாகப்பிரதிஷ்டை செய்தனரென்பதை யுணர்ந்தறிக. மணிமேகலையில் வேம்புக்கு 'அரவாய்க்கடிப்பகை' எனப் பெயர் சொல்லப்பட்டிருக்கிறது. (தொடரும்)

## செவிடும் குருடுமாய் நல்லூழில்லா நங்கையர்க்கோர் இல்லம்

### திருவாளர் ப. சுப்பையா ஆச்சாரி அவர்களும் மனைவியாரும் உதவிய பெருங் கொடை

செவிடும் குருடுமாய்த் துர்ப்பாக்கிய வசப்பட்ட யுவதிகளின் பொருட்டு, கொழும்பிற்கு சமீபத்திலுள்ள கந்தானை யென்னும் இடத்திலே, காலஞ்சென்ற திரு. பட்டகண்ணு ஆச்சாரியாரின் குமாரர் திரு. சுப்பையா ஆச்சாரியார் அவர்களால் அளிக்கப்பட்ட அழகிய இல்லத்தின் திறப்புவிழா சென்ற சனிக்கிழமை மாலை கொண்டாடப்பட்டது. ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் செழுமையான தோட்டத்தின் மத்தியில் மிளிர்வது இவ்வழகிய இல்லம். மே. த. தேசாதிபதி அவர்கள் இல்லத்தைத் திறந்து வைத்தார்கள். பிரபுக்கள் பலரும் ஏனையோருந் திரண்ட ஒரு பெருங்கூட்டம் சமூகமளித்தது. கொழும்பு நகர்ப் பெருந் தேசிகராகிய உயர்திரு: Horley அவர்கள் பாடசாலை அதிபர்கள் சார்பாக இந்த இல்லக்கொடையை ஏற்றுக்கொண்டார்கள்.

திரு. சுப்பையா ஆச்சாரியார் அவர்களையும் மனைவியாரையும் அவர்களது சிறந்த உதாரகுணத்தின் விளைவான இப்பெருங் கொடைக்காகத் தேசாதிபதியவர்கள் மிகவும் பாராட்டிப் பேசிய புகழுரையோடு தமது நன்றியையும் தெரிவித்தார்கள். இன்று மட்டுமன்று, சந்ததி சந்ததியாகப் பெரும்பயன் விளைக்க வல்லதாய் அளவிடற்கரிய பெரும் புகழையுமுடைத்தாய் விளங்கும் இவ்வரிய செயல் புரிந்தவர்களை நேரே கண்டு நன்றிகூறுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்ததற்குத் தானும் தனது மனைவியாரும் மிக்க மகிழ்ச்சி யடைந்ததாகவும் மோட்டார் ரதங்களுக்கு எண்ணைப்பஞ்சம் மலிந்துள்ள இக்காலத்தில் ரதயாத்திரை வாய்க்காவிட்டால் கால்நடையாகவேனும் தாங்கள் நடந்து வந்து ஏற்றுக்கொள்ள வேண்டிய தகுதிவாய்ந்தது இவ்வரிய கொடையென்றும் தேசாதிபதியவர்கள் சொன்னார்கள்.

மே. த. தேசாதிபதி யவர்கட்கும், அவரது மனைவியாருக்கும் ஆச்சாரியார் சார்பாகத் நன்றிகூறிய திரு. க. கனகரத்தினம் அவர்கள் இத்தகைய வண்மைச் செயல் செய்யவேண்டுமென்று சில ஆண்டுகளாக எண்ணங் கொண்டிருந்த திருவாளர் ஆச்சாரியார் அவர்கள் ஒரு இரவு அதிசயமான கனவொன்று கண்டு மறுநாள் கொழும்புப் பட்டினத்திலே இந்தப் பாடசாலைப் பொறுப்பாளர்கள் எங்கு உள்ளாரென்று விசாரித்துத் தேடிச்சென்று இந் நன்கொடையை உதவினார்களென்பதாகிய இக் கொடையின் ரசமான சரித்திரத்தையும் கூறிப் பாராட்டினார்கள். பொருளுடையார் பலர் இந்நாட்டில் உளரேனும், அவருட் பெரும்பாலோர் ஈகைநலம் மறியாதவர்களாய் இருக்கின்றார்களென்றும் பெருஞ் செல்வன் என்று சொல்லமுடியாத நிலையிலுள்ள ஆச்சாரியாரவர்கள் இவ்வரிய அறச்செயல் செய்ய முன்வந்தது பாராட்டுக்குரியதென்றும் கனகரத்தினமவர்கள் சொன்னார்கள்.

இந்த இல்லத்தில் 60 யுவதிகளுக்கு இடமுண்டு. கல்கிசையென்னும் இடத்திலேயுள்ள இவர்களது நிலையான இல்லம் யுத்த சம்பந்தமாகப் பிறதேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருங் காரணத்தால் உறைவிடமின்றித் தவிக்கும் இத் துர்ப்பாக்கியவசப்பட்ட வளூச்சகாதரர்கட்கு இந்தக் கொடையானது உற்றுழிக்கிடைத்த ஒப்பில் உதவியாமென்க.

விழாவிற்குப் போந்த மக்களனைவரும் ஆச்சாரியார் தம்பதிகளைப் பாராட்டி ஆசிகூறினரென அறிந்து மகிழலானோம்.

### அரசியற் பிரச்னையும் டில்லி அபிப்பிராயமும்

1-ம் பக்கத் தொடர்ச்சி

நிக்கொள்ள முயற்சிப்பாராம். இதற்காக தொழிலாளர்களுக்குத் அதிக சம்பளம் முதலிய சிலாக்கியங்களுக்கு ஏற்பாடு செய்வாராம். அரசியல் நெருக்கடியைத் தீர்க்க முயற்சிக்க மாட்டாராம். குலாபிகளின் ஆதரவைக் கொண்டே தமது காரியத்தை நடத்துவாராம்.

புது வைசிராய் விரைவில் மாகாணங்களின் தலைநகரங்களுக்கு விஜயம் செய்வாராம்.

## மேலும் இரு இடங்கள் நேசப்படை வசமாயின

### இத்தாலியில் கடுமையான போர்

லண்டன், நவ 5

அட்ரியாடிக் கடற்கரையிலுள்ள சான்சால்வோ, கார்பினோன் ஆகிய இரு இடங்களை நேசப்படைகள் கைப்பற்றிவிட்டன வென்று அல்ஜீயேர்ஸிலுள்ள ஐக்கிய நாடுகளின் ரேடியோ அறிவிக்கிறது.

நேற்றிரவு நமது வெடிகுண்டு விமானங்கள் மேற்கு ஜெர்மனியிலுள்ள இலக்குகளைத் தாக்கின. சத்துரு கடல்களில் சுரங்கவெடிகள் விதைக்கப்பட்டன. நமது விமானங்களில் நான்கு திரும்பவில்லை என்று பிரிட்டிஷ விமானப்படை மந்திரி காரியாலய அறிக்கையொன்று கூறுகிறது.

வட ஆபிரிக்காவிலிருந்து வெளியான நேச அறிக்கை கூறுவதாவது: ஜெர்மானிக்கு வடமேற்கேயுள்ள சான்சால்வோ என்னுமிடத்திற்கு வடக்கேயுள்ள சத்துரு தளங்களை இரு பிரிட்டிஷ் நாசகாரிகள் தரைப் படைகளுக்கு உதவியாகப் பீரங்கிப் பிரயோகஞ் செய்தன.

ஐந்தாவதுசேனை முன்னேறிவருகிறது. மேற்குக் கடற்கரையில் நமது துருப்புகள் காரிக்லியானோவிற்கருகில் வந்துவிட்டன. வால்டர்னோ நதியின் மேல்பகுதியில் நம் துருப்புகள் நதியைப் பலவிடங்களில் கடந்திருக்கின்றன. கரையோரப்பகுதியைச் சத்துரு வெள்ளப் பெருக்கெடுத்து ஓடச் செய்திருக்கிறான்.

கிழக்குக் கடற்கரைப் பகுதியில் எட்டாவதுசேனை சான்சால்வோப் பகுதியில் சத்துரு எதிர்ப்பை முறியடித்துவிட்டது. நம் துருப்புகள் முன்னேறி வருகின்றன. இன்னும் முக்கிய போகுவரத்துத் தளமாகிய இஸர்னியா கைப்பற்றப்பட்டிருக்கிறது.


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,36700**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Y 164 21-11-41—20-11-43 (தி)

# அறிவித்தல்

குழந்தைகளுக்குக் காத்திராசப்பிரகாரம் உண்டாகும் மாந்தம், இருமல், கிரந்தி காய்ச்சல் ஆகிய நோய்களைத் தணிக்கும் ஒப்புயர்வற்ற மருந்துகள் எம்மிடம் ஏராளமாயுண்டு.

குளிர்சுரம் (மலேரியா) இருமல், உஷ்ணச்சூடு, வாதம், கிரந்தி, நரம்புப் பெலவீனம், மலடு ஆகிய நோய்களைத் தீர்க்கும் கீழ்க்கண்ட மருந்துகள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

அயக்குழம்பு, சென்னகரம்பழநெய், காந்தபஸ்பம் வெள்ளறுகுப்பஸ்பம், அமுதசர்க்கரை, கிரந்திக்குளிகை, பெருங்கிரந்தி எண்ணெய், கோட்டைச்சந்தனாதி எண்ணெய், மகாசஞ்சீவி மாத்திரை, கோரோசனை மாத்திரை, அயசெந்தூரம்.

சில்லாலைமுத்துவைத்தியசாலை, 160, மேல்வீடு, பெரியதெரு, யாழ்ப்பாணம்.

வைத்தியர்: அ. செபஸ்தியாம்பிள்ளை.

(Q. 30. 11-5-43—10-11-43)

குறைந்த விலையில் **துணிகள்** வேஷ்டிகள், துவாய்கள் பஞ்சாலும் பட்டாலும் ஆகிய சேலைகள் முதலியவை.

**R. S. M. டெக்ஸ்டைல் ஸ்டோர்ஸ்**

மொத்தத்துக்கும் சில்லறைக்கும் விற்கும் வியாபாரிகள்

பெரியகடை—யாழ்ப்பாணம். K. A. இரத்தினசிங்கம், பங்காளர்.

Y 19. 4-3-42—3-3-44


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday, 8th November 1943.